செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

பாரத மொழிகளின் திருவிழா
(28.09.2023-11.12.2023)
"மொழிகள் பல; உணர்வு ஒன்றே"

# தமிழக நாட்டுப்புற மரபுகள்

நாள்: 03.11.2023

## Folk Traditions of Tamil Nadu

## பள்ளி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி

## அறிவிப்பும் அழைப்பும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் "பாரத மொழிகளின் திருவிழா" முன்னிட்டுக் கருத்தரங்குகள், பயிலரங்குகள் ஆகிய கல்விசார் நிகழ்வுகளை நடத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக நாட்டுப்புறவியல் துறைசார்ந்து "தமிழக நாட்டுப்புற மரபுகள் (Folk Traditions of Tamil Nadu) எனும் பொருண்மையில், தமிழக நாட்டுப்புற மரபுகளை மீட்டுருவாக்கம் செய்யும் நோக்கில் பள்ளி மாணவர்களுக்கு ஓவியப்போட்டியை நடத்தவுள்ளது. இந்த ஓவியப் போட்டியில் பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டு தங்கள் கலைத் திறனை வெளிப்படுத்த அழைக்கிறோம். பெற்றோர்களும் ஆசிரியர்களும் தங்கள் குழந்தைகளைப் போட்டியில் பங்கேற்கச் செய்து ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

### ஓவியத் தலைப்பு - தமிழர் கலைகள்

### 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை

ஒரு நாட்டின் பண்பாட்டு அடையாளமாகக் கலைகள் விளங்குகின்றன. 'ஆயக் கலைகள் அறுபத்து நான்கனையும் ஏய உணர்விக்கும் என் அம்மை' எனக் கம்பர் கூறுவார். இவ்வகையில் தமிழ்ப் பண்பாட்டின் அடையாளமாக விளங்கும் பின்வரும் கலைகளில் ஏதேனும் ஒன்றை மையமாகக் கொண்டோ அல்லது இவைபோன்ற ஏனைய கலைகளில் ஏதேனும் ஒன்றை மையமாகக் கொண்டோ ஓவியமாக வரைந்து அனுப்பலாம்.

இராஜாராணி ஆட்டம், இலாவணி, உடுக்கைப் பாட்டு, ஒயிலாட்டம், கணியான் கூத்து, கரகாட்டம், கழியல் ஆட்டம், காவடியாட்டம், காளையாட்டம், குறவன் குறத்தி ஆட்டம், கைச்சிலம்பாட்டம், கோலாட்டம், சக்கையாட்டம், சிலம்பாட்டம், சேவையாட்டம், தப்பாட்டம், தெருக்கூத்து, தேவராட்டம்,

தோற்பாவைக் கூத்து, புலியாட்டம், பொம்மலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம், மரக்காலாட்டம், வில்லுப் பாட்டு மற்றும் இவை போன்ற ஏனைய கலைகள்.

## ஓவியத் தலைப்பு - நாட்டுப்புறத் தெய்வங்கள்

### 9,10ஆம் வகுப்பு மாணவர்கள்

மக்களோடு மக்களாக வாழ்ந்து நற்செயல்கள் செய்த முன்னோர்களை உயர்நிலையில் வைத்து வழிபடும் தெய்வங்களே நாட்டுப்புறத் தெய்வங்கள் ஆகும். நாட்டுப்புறத் தெய்வங்களை ஊர்த் தெய்வங்கள், எல்லை தெய்வங்கள், குலதெய்வங்கள் என அடையாளப்படுத்துவர். இவ்வகையில் பின்வரும் நாட்டுப்புறத் தெய்வங்களில் ஏதேனும் ஒன்றையோ அல்லது இவைபோன்ற ஏனைய நாட்டுப்புறத் தெய்வங்களில் ஒன்றையோ தேர்ந்தெடுத்து ஓவியமாக வரைந்து அனுப்பலாம்.

### நாட்டுப்புறப் பெண் தெய்வங்கள்

காளியம்மன், துர்க்கையம்மன், செல்லியம்மன், மாரியம்மன், காந்தாரியம்மன், வெயிலுகாத்தம்மன், உச்சிமாகாளி, காய்ச்சிக்காரம்மன், வடக்கு வாய்ச்சொல்லி, அரிய நாச்சியம்மன், வீரகாளியம்மன், அங்காள ஈசுவரி, குளத்து அம்மன், மந்தையம்மன், வடக்குத்தியம்மன், சந்தனமாரியம்மன், பெத்தனாட்சி, சோலையம்மன், காமாட்சியம்மன், மரகதவல்லி, செண்பகவல்லியம்மன், சந்திரமாகாளி, அட்டங்கம்மா, அம்மாரி, அங்கம்மா, அன்னம்மா, அரிக்கம்மா, பாலம்மா, பத்ரகாளி, செமலம்மா, தாலம்மா, தோட்டம்மா, திரௌபதி, கங்கம்மா, கூனல்மாரி, கிரிதேவி, கன்னியம்மா, கன்னிகை, கீர்மாரி, மலைமாயி, மாரம்மா, முனி, முத்தாலம்மா, பிடாரி, பூலம்மா, சப்தகன்னிகை, துர்க்கை, உடலம்மா, உக்கிரமாகாளி, உச்சினமாகாளி, வாசுகோடி, ஈலம்மா, வானமாலம்மன் மற்றும் இவை போன்ற ஏனைய நாட்டுப்புற பெண் தெய்வங்கள்.

### நாட்டுப்புற ஆண் தெய்வங்கள்

இருளப்பச்சாமி, கருப்பசாமி, ஐயனார், மாடசாமி, சுடலைமாடன், முனிசாமி, தலைவாயில் கருப்பசாமி, உத்தண்டசாமி, சமயக்கருப்பசாமி, சங்கிலிக் கருப்பசாமி, பெரியாண்டவர், பசவன்னா, பதலமா, புத்தாகாசிப், எல்லைக்கறுப்பு, கறுப்பண்ணா, கறுப்பு, கூத்தாண்டவர், மாதேஸ்வரா, மதுரைவீரன், ஊர் அத்தியன், மகாலிங்கா, ராஜவாயன், பெரியண்ணாசுவாமி மற்றும் இவை போன்ற ஏனைய நாட்டுப்புற ஆண் தெய்வங்கள்.

## ஓவியத் தலைப்பு - தமிழர் விளையாட்டுகள்

### 11, 12ஆம் வகுப்பு மாணவர்கள்

‘செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று
அல்லல் நீத்த உவகை நான்கே’ (தொல்.1205)

எனத் தொல்காப்பியம் கூறுகிறது. பாரம்பரிய விளையாட்டுகள் வெறும் விளையாட்டு மட்டுமல்ல அது தமிழரின் பண்பாட்டை எடுத்துரைக்கும் ஆவணமாக விளங்குகிறது. வீரம், விவேகம், முயற்சி, தன்னம்பிக்கை, அறிவுத்திறன், சகிப்புத்தன்மை ஆகியனவற்றைக் கற்றுக்கொடுக்கும் கருவிகளாகத் தமிழர் விளையாட்டுகள் விளங்குகின்றன. இவ்வகையில் பின்வரும் தமிழர் விளையாட்டுகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது இவைபோன்ற ஏனைய தமிழர் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றையோ தேர்ந்தெடுத்து ஓவியமாக வரைந்து அனுப்பலாம்.

சிலம்பாட்டம், ஜல்லிக்கட்டு, கபடி, ஆடுபுலி ஆட்டம், தாயம், பல்லாங்குழி, தட்டாங்கள், நொண்டி விளையாட்டு, கிட்டுப்புள், பம்பரம், குண்டு விளையாட்டு, பட்டம் விடுதல், கரகரவண்டி, பச்சைக் குதிரை, கிச்சுக் கிச்சுத் தாம்பூலம், பூப்பறிக்க வருகிறோம், எலியும் பூனையும், அத்திலி புத்திலி, அழுங்காமல், நேருக்கு நேர், சவடைக்கல், பிள்ளையார் பந்து, ஒருப்புட்டான் திருப்புட்டான், இது யார் கொம்பு, தட்டாங்கல், மாவளியோ மாவளி, ஓணப்பந்து, காத்தாடி, கோலி, எலியும் பூனையும், அம்பால், கண்ணாமூச்சி, கல்பாரி, ஊஞ்சல், குரவை, கூட்டாஞ்சோறு, கழங்கு, வள்ளை, உறியடி, சில்லுக்கோடு, வழுக்குமரம், வண்டிப்போட்டி, ஓட்டப்போட்டி, தட்டா மாலை, புளியங் கொட்டை, கண்டு பிடித்து, அணிப்பிள்ளை, கண்ணாமூச்சி, பூசணிக்காய், குலைகுலையா முந்திரிக்கா மற்றும் இவை போன்ற ஏனைய பாரம்பரிய விளையாட்டுகள்.

## ஓவியப் போட்டிக்கான விதிமுறைகளும் விவரங்களும்

- பள்ளி மாணவர்கள் மட்டுமே இவ் ஓவியப் போட்டியில் பங்கேற்க வேண்டும்.
- நகல் (Xerox) அனுப்பாமல் கையால் வரையப்பட்ட படியை (Original) அனுப்ப வேண்டும்.
- ஓவியம் ஒரு பக்கத்தில் (A3+ அளவுள்ள கெட்டி அட்டையில்; பல வண்ணத்தில்) கையால் வரையப்பட்டதாக அமைய வேண்டும்.

- மாணவர்கள் தாங்கள் வரைந்த ஓவியத்தைப் பள்ளியின் வழியாகவோ நேரடியாகவோ அனுப்பலாம்.
- ஒவ்வொரு பிரிவிலும் தலா 6 பேருக்குப் பரிசுகள் வழங்கப்படும்.
- முதல் பரிசு ரூ.10,000/-, இரண்டாம் பரிசு ரூ.7,000/-, மூன்றாம் பரிசு ரூ.5,000/-, ஆறுதல் பரிசு ரூ. 3,000( மூவருக்கு).
- பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்படும்.
- ஓவியங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள்: 30.11.2023
- எக்காரணத்தைக் கொண்டும் இவை தொடர்பாகச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு நேரில் வரவோ, தொலைபேசி வழியாகத் தொடர்புகொள்ளவோ கூடாது.
- மாணவர் பெயர், தந்தை/தாய் பெயர், படிக்கும் வகுப்பு, பள்ளியின் பெயர் மற்றும் முகவரி, வீட்டு அஞ்சல் முகவரி, அலைபேசி எண், புலன எண், மின்னஞ்சல் முகவரி ஆகியனவற்றைத் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும்.
- ஓவியங்களை அஞ்சலில் மட்டுமே கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- ஓவியங்களை அனுப்ப வேண்டிய முகவரி : **இயக்குநர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100.**